Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.178/2019 PW-1**

Name : விஜயக்குமார்
Father / Husband name : நடராஜன்
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.11.2024

**Accused Absent. Petition u/s 317 CrPC filed and allowed.**

**சாட்சி மனுவின் படி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எவ்வளவு நாட்களாக ஓட்டுநர் வேலை செய்கிறேன் என்றால் 30 வருடம். TN 30 Y 4460 என்ற வாகனம் எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். நான் எந்த ஊரிலிருந்து வண்டியை எடுத்து சரக்கு ஏற்றிக்கொண்டு எந்த ஊருக்கு ஏற்றி சென்றேன் என்பதை காண்பிக்க ட்ரிப் சீட் என்னை விசாரித்த போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ட்ரிப் சீட் எழுதும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. அரசு மதுபானங்களை எங்கு ஏற்றி எங்கு இறக்குகிறேன் என்பதற்கு ரசீது கொடுப்பார்கள் என்றால் பில் கொடுப்பார்கள். என்னை எந்த போலிசார் விசாரித்தார்கள் என்று குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்னாடி நாள் வண்டியை எங்கிருந்து எடுத்தேன் என்றால் சென்னையிலிருந்து எடுத்தேன். லாரியை ஏற்றும் சரக்குகளை எத்தனை மணிக்குள் கொண்டு சேர்க்கவேண்டும் என்று டைம் உள்ளது என்றால் சரிதான். அது எத்தனை மணிக்குள் கொண்டு சேர்க்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் பர்மிட்டில் இருக்கும். அந்த பர்மிட்டை விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் எத்தனை மணிக்கு ஒலக்கூர் பார்க்கிங் வந்தேன் என்றால் இரவு 12 மணிக்கு வந்து காலை 4 மணிக்கு எழுந்தேன். நான் சலவாதி கிராமத்திற்கு வரும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை 5 மணி. சலவாதி முன்னர் சாலையின் குறுக்கே வெள்ளை கோடுகள் போடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் குறுக்கு வெள்ளைகோடுகள் இருக்கும் இடத்தில் யாராவது சாலையை கடந்துவிடுவார்கள் என்று வாகனங்கள் மெதுவாக செல்லவேண்டும் என்றால் சரிதான். சலவாதி குறுக்கு சாலையில்

வாகனம் செல்லும்போது எவ்வளவு தூரத்திற்கு பார்வை தெளிவாக தெரியும் என்றால் சாலையின் முழுவதும் தெரியும். புகார் நான் கைப்பட எழுதியது என்றால் சரிதான். புகாரில் உள்ள வாசகங்கள் யார் சொன்னது என்றால் எனது வழக்கறிஞர் சொன்னார். சம்பவம் நடக்கும்போது எதிரிலுள்ள வாகனத்தை எவ்வளவு தூரத்தில் பார்த்தேன் என்றால் என்னுடன் வந்து, உடனடியாக வலது புறமாக திரும்பிவிட்டார். அவரும் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் தான் வந்தார் என்று புகாரில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன், அவர் கிராமத்திலிருந்து ஏறி தேசிய நெடுஞ்சாலைக்கு வந்தார். நான் எவ்வளவு கி.மீ. வேகத்தில் வந்தேன் என்றால் 50 கி.மீ. அந்த வேகத்தில் செல்லும்போது யாராவது குறுக்கில் வந்தால் உடனடியாக பிரேக் அடித்து நிறுத்த முடியும் என்றால் சரிதான். இடித்த வாகனம் எந்த வகை வாகனம் என்றால் பெரிய பேருந்து. அந்த பேருந்திற்கு எந்த பகுதியில் அடிப்பட்டது என்றால் பின்பக்கம். பேருந்து எத்தனை கி.மீ. வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சென்னையிலிருந்து எத்தனை கி.மீ. வந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான், சலவாதி கிராமத்திலிருந்து வெளியில் வந்தார். அந்த குறுக்கு பாதை சலவாதி கிராமத்திலிருந்து வெளியில்வரும் பாதை என்றால் சரிதான், சம்பவம் கிராமத்திலிருந்து வெளியில் வந்து யுடர்ன் போட்டதால் நடந்தது. எனது வாகனத்தின் பக்கத்தில் பேருந்து இணையாக வந்தது என்றால் சரிதான். அவ்வாறு இணையாக வந்தது என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை அடி தூரத்தில் இணையாக பேருந்து வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பேருந்தில் எனது வாகனம் இடித்து ஓரமாக இருந்த பேருந்து நிறுத்தத்தில் இடித்து நின்றது என்றால் சரிதான். அவ்வாறு நின்றதில் எனது வாகனத்திற்கு கேபின் சேதம் ஏற்பட்டது என்றால் சரிதான். பேருந்து கிராமத்திற்கு திரும்புவதற்காக ஓரமாக நின்றது, நான் தான் சரக்குகளை குறித்த நேரத்தில் இறக்கவேண்டும் என்று வேகமாக வந்து இடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. மெதுவாக வந்திருந்தால் பேருந்தில் எனது வாகனம் இடித்து நின்றிருக்கும், வேகமாக வந்ததால் தான் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து நிறுத்தத்தில் நின்றது என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை 5 மணிக்கு. புகாரை எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் வண்டியில் அடிப்பட்டிருக்கும்போது ஸ்டேட்மண்ட் வாங்கினார்கள். அப்போது விபத்து நடந்த விவரத்தை

சொன்னேனா என்றால் சொன்னேன். வழக்கறிஞர் காலை 9 மணிக்கு வந்தார் என்றால் சரிதான். வழக்கறிஞரின் ஆலோசனையின் பேரில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் 50 கி.மீ. வேகத்தில் வந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது, நான் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்ததால் தான் தூக்கக்கலத்தில் பேருந்தின் பின்புறம் இடித்து விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் இணையாக வந்திருந்தால் பேருந்தின் முன்பக்கம் சேதம் ஏற்பட்டிருக்கும், பின்பக்கம் ஏற்படவாய்ப்பில்லை என்றால் சரியல்ல. புகார் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. புகார் இரவு 9.15 மணிக்கு கொடுக்கப்பட்டுள்ளது, அதற்கான காலதாமத்திற்கான காரணத்தை புகாரிலும் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் நான் வாகனத்தை அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்ததால் தான் என்றால் சரியல்ல. எதிரிக்கு இந்த விபத்தில் அடிப்பட்டது என்றால் இல்லை. எனக்கு அடிப்பட்டதா என்றால் அடிப்பட்டது. நான் சொல்வது போல் விபத்து ஏற்பட்டிருந்தால் எதிரிக்கும் அடிப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.